***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.389/2022 – P.W. 7 (LW7)***

| | |
|---|---|
| *Name* | மருத்துவர் திரு. மோகன்ராஜ், உதவி மருத்துவர் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | |

**எதிரி 1 ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 22.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.10.2022 ம் தேதியன்று காலை 09.35 மணிக்கு 24 மணி நேர சுழற்சி பணியிலிருந்தபோது 55 வயதுடைய குணசேகரன் என்பவரை மணிகண்டன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது, 05.10.2022 ம் தேதியன்று காலை 08-15 மணியளவில் அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள், பெண் ஒருவர் தன் வீட்டில் வைத்து கல்லால் தாக்கியதாக அவரே கூறினார். அவரை பரிசோதித்தபோது முழு சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு 3 x 1 x 1 செ.மீ அளவில் கிழிந்த காயம் நெற்றியின் வலது பக்கத்தில் இருந்தது. அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அன்றைய தினம் காலை 09.25 மணிக்கு 40 வயதுடைய இந்திரா என்பவரை மணிகண்டன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது 05.10.2022 ம் தேததியன்று காலை 08.15 மணியளவில் அடையாளம்

தெரிந்த 1 பெண் மற்றும் 2 ஆண்கள் தன் வீட்டில் வைத்து கல் மற்றும் அருவாளால் தாக்கியதாக அழைத்து வந்தவர் கூறினார். அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, அவரை பரிசோதித்தபோது முழு சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு 5 x 1 செ.மீ x எலும்பு வரை கிழிந்த காயமானது அவரது மூக்கின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வரை இருந்தது. மூக்கிலிருந்து இரத்தம் வந்துக்கொண்டிருந்தது. அவரை மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். (**விபத்து பதிவேடு அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மேற்கண்ட நோயாளிகள் இருவருக்கும் ஏற்பட்ட காயமானது அவர்கள் சொன்ன நேரத்திற்கு முன்போ அல்லது பின்போ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் - சரிதான்.

2. என்னை போலிசார் விசாரணை செய்தபோது ஏதேனும் ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால் - இல்லை.

3. மேற்கொண்ட இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயமானது கூர்மையான மூங்கில் கழி மற்றும் மரத்தில் தவறி விழுந்து கிழித்துக்கொண்டால் கூட இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்றால் - சரிதான்.

4. 2 நோயாளி தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் நடந்த விதம் பற்றியும் எதுவும் கூறவில்லை என்றாலும் அவரை அழைத்து வந்த நபர்தான் கூறினார் என்றாலும் - சரிதான். அவர் பெயர் மணிகண்டன் ஆகும். 2 வது நோயாளிக்கு பிளாஸ்டிக் சர்ஜரி தேவைப்பட்டதால் நான் கட்டு மட்டும் போட்டு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன் என்றால் - சரிதான்.

5. முதலாம் நோயாளி எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் - 3 நாட்கள் இருந்தார்.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.10.22 16:28:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.